தொல்காப்பியத்தில் வாழ்வியல் அறநெறிகள்

முனைவர் பெ. அசோக்குமார்
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்

முன்னுரை

தமிழ் இலக்கியங்களுள் மிகவும் பழமையானதாகவும், முதன்மையானதாகவும் கருதப்படுவது தொல்காப்பியம் ஆகும். இந்நூல் மிகச்சிறந்த இலக்கண நூல் ஆகும். இருப்பினும், முழுமையான நூல் என்றழைக்கப்படுவது தொல்காப்பியமே என்பார். எந்த நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பது ஆய்வுக்கு உரியதாக உள்ளது. இதனை இயற்றியவர் தொல்காப்பியர் என்று குறிப்பிடுவர். தொல்காப்பியம் பிற இலக்கண நூல்களைக் காட்டிலும் சிறப்பிற்குரியதாகும். அத்தகைய இலக்கண நூலில் தமிழ் மக்களின் வாழ்வியல் அறநெறிகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

இறை நம்பிக்கை

கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்குதல் இன்றும் தமிழ் மக்களிடையே நிலவி வரும் பண்பாடு ஆகும். இவ்வாறே தமக்கு விருப்பமான கடவுளை வணங்கி வழிபடுகிறார்கள் என்பதைத் தொல்காப்பியர்,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"

(தொல். பொருள். அகத். நூற்- 5)

என்ற நூற்பாவில், திருமாலும், முருகனும் முழுமுதற் கடவுளாக நம்பப்படுவதையும், இந்திரன், வருணன் போன்ற தேவர் கூட்டத்தினர் வணங்கி இருப்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

ஒழுக்கம்

ஒழுக்கமுடையோர் வாழ்வையே உயர்வானதாகக் கூறுவர். சான்றோர் நெறி எனவும் கூறுவர். அந்நெறியில் ஒழுகுதல் நல்ல ஒழுக்கம் ஆகும்.

"வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் பாகலான்"

(தொல். பொருள். மரபு. நூற்: 94)

என்ற நூற்பாவில் ஒழுக்கம் உடையோரை உயர்ந்தவர்களாக எடுத்துக்கொண்டு அவர் கூறும் நெறியுடன் வாழ வேண்டும் என்பதை குறிப்பிடுகின்றனர்.

பண்பு நலன்

பழந்தமிழர்களின் பண்பாட்டின் நிலைக்களனாக எடுத்துரைப்பது பண்பாகும். இத்தகைய பண்பு நலம் அக்காலத்தில் இருந்த மகளிரிடம் சிறந்து காணப்படுகிறது. அச்சம், மடம், நாணம் போன்ற பண்புகள் பெண்களுக்கு உரியன.

"அச்சமும் நாணமும் மடனும் முந்துறுத்தல்
நிச்சமும் பெண்பாற்குரிய என்ப"

(தொல். பொருள். கள. நூற்:- 8)

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான"

(தொல். பொருள். கள. நூற்: 14)

என்று பெண்களுக்குரிய பண்பு நலன்களைப் பற்றித் தொல்காப்பியர் சுட்டி காட்டுகின்றார்.

போர்

பண்டைத் தமிழர்கள் காதலையும் வீரத்தையும் இரண்டு கண்களாக கடைப்பிடித்து வாழ்ந்தனர். பழங்காலத்தில் எதிர்பாராமல் போர் நடைபெறுவதில்லை. போர் செய்யப்போவதை முன்கூட்டியே அறிவிப்பு

வெளிவந்த பின்னரே போர் நிகழும் என்பதை,

"போந்தை வேம்பே ஆர்என வரூஉம்
மாபெருந் தானையர் மலைத்த பூவும்"
(தொல். பொருள். புறத். நூற் - 5)

என்ற நூற்பா மூலம் மூவேந்தர்களின் அரசர்களுக்கிடையே போர்கள் நடைபெற்ற பதிவினைக் காட்டுகின்றன.

திருமணம்

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னரே சான்றோர் திருமணம் என்ற மரபினை முறைப்படி கடைப்பிடித்து வந்திருந்தனர். அச்செய்தியைத் தொல்காப்பியர்,

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் காரணம் என்ப"
(தொல். பொருள். கற்பு. நூற்:- 4)

மேலும், எட்டு வகைத் திருமண முறைகளுள் காந்தருவ முறையே சிறந்த திருமணம் என்று தமிழர்கள் கடைப்பிடித்ததற்கு,

"மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"
(தொல். பொருள். கள. நூற்:- 1)

என்ற நூற்பா சான்றாக அமைகின்றன.

இல்லறம்

பண்டைத் தமிழர்கள் திருமண வாழ்வை இல்லறம் என்று அழைப்பர். அன்பு பண்பாகவும், அறம் பயனாகவும் அமைந்து இருப்பதே இல்வாழ்க்கை ஆகும். அகவாழ்வில் தலைவன், தலைவி இருவரும் அன்புமிக்கவராகவும், அறம் செய்பவராகவும் விளங்கி இருந்தனர்.

"காமஞ் சென்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"
(தொல். பொருள். கற்பு. நூற்:- 51)

இல்லிருந்து இன்பம் அனுபவித்த நன்மக்களைப் பெற்றுச் சுற்றத்தாருடன் நல்லறம் புரிந்து பின் துறவறம் மேற்கொண்டனர் என்ற கருத்தினை இந்நூற்பா தெளிவுபடுத்துகின்றன.

விருந்தோம்பல்

நமது தமிழ்ப்பண்பாட்டில் மிகச் சிறப்புக் குரிய பண்புகளுள் விருந்தோம்பல் முறையும் ஒன்று. விருந்து என்றால் புதியவர் அல்லது பழமை என்று பொருள்படும். தமிழர்கள் தங்கள் இல்லத்திற்கு வரும் விருந்தினரை அகமும் முகமும் சேர்ந்து மலர வரவேற்று உபசரித்ததைத் தொல்காப்பியர்,

"புகாஅக் காலைப் புக்கதிற் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்
வேளாண்எதிரும் விருந்தின் கண்ணும்
விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்"
(தொல். பொருள். கற்பு. நூற்:- 5)

என்னும் நூற்பா மூலம் உணரமுடிகின்றது.

முடிவுரை

தமிழ்மொழியின் மிகப் பழமையான இந்நூல் தமிழர்களின் நல்வாழ்வுக்குரிய அடையாளமாகத் திகழ்கின்றது. இவ்விலக்கணமானது உலகின் வேறு எந்த மொழிகளிலும் இல்லாதது தமிழ் மொழிகளில் மட்டுமே இருப்பது பொக்கிஷம் ஆகும். எனவே தான் இதனைத் தமிழர்கள் தமது வாழ்வியல் அறநெறி நூலாகப் பதிவு செய்கின்றனர்.

துணை நூல்

1. முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ் (உ.ஆ), தொல்காப்பியம் - பொருளதிகாரம், இயல் வெளியீடு, 23:16. 2739, தொப்புள் பிள்ளையார் கோவில் தெரு, தெற்கலங்கம், தஞ்சாவூர், முதற்பதிப்பு - 2016.